**வாக்குமூலம்**
**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 66/2021 |
| வழக்கு சாட்சி | : | PW 7 |
| நாள் | : | 05.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.பத்மினி பிரியதர்ஷினி | ஜாதி | : | |
| கணவர்– பெயர் | : | அலக்ஸ் பாண்டியன் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | சென்னை | வயது | : | |

**எதிரிகள் ஆஜர்**
**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது சென்னை, மணலி ESI Dispensary–ல் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவள்ளுர் அரசு மருத்துவனையில் வேலை Assistant Surgeon ஆக பணிபுரிந்து போது 09.07.2020 அன்று நான் பணியில் இருந்த போது திருநின்றவூர் காவல் நிலைய குற்ற எண்.546/2020 பிரிவு 147, 148, 302 இதச சம்பந்தப்பட்ட வழக்கில் தலைமை காவலர் குருநாதன் என்பவர் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று தலைமை காவலர் அடையாளம் காட்டிய பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தேன். சுமார் காலை 11.45 மணியளவில் பிரேத பரிசோதனை மேற்கொண்டேன். அந்த பிரேதத்தின் முகம் ஒழுங்கற்ற முறையில் சிதைந்து காணப்பட்டது. கண் மற்றும் தலையில் பலதரப்பட்ட காயங்கள் காணப்பட்டது. வாய் மூடிய நிலையில் இருந்து. காது, மூக்கு, தொண்டை பகுதிகளில் ரத்த கசிவு இருந்தது. கைகள் திறந்த நிலையில் இருந்தது. பற்கள், நாக்கு சதாரண நிலையில் இருந்தது. பிறகு பிரேதத்தின் மீது காணப்பட்ட

**வெளிபுற காயங்கள்**

தலை மற்றும் முகம் சிதைந்து காயங்கள் காணப்பட்டன. சுமார் 7 x 3 x 9 செ.மி அளவு கொண்டு தாடை எலும்பு மற்றும் அதன் தொடர்புடைய எலும்பில் முறிவு காணப்பட்டது. இடது புற பக்கவாட்டில் மூலைக்கு செல்லும் ஜுகுலார்

வெசல்சஸ் பலத்து காயம் அடைந்ததால் ரத்த கசிவு காணப்பட்டது. நெற்றியிலும் மூக்கு தண்டு எலும்பிலும் 4 x 2 x 1செ.மி. அளவில் காயம் காணப்பட்டது. இடது புற புருவத்தின் மற்றும் கண் இமையில் 4 x 1 x 3செ.மி. அளவில் வெட்டு காயம் காணப்பட்டது. இடது புற தாடையில் 6 x 2 x 1.5 செ.மி. அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது. இடது புற கண்ணத்தின் எலும்பு உடைந்து காணப்பட்டது. மூக்கு நுனியிலிருந்து 8 x 2 x 4செ.மி. அளவில் கிழிந்த காயம் மற்றும் மூக்கு எலும்புகள் உடைந்து காணப்பட்டது. இடது புறம் Parietal bone 6 x 1 x 1செ.மி. அளவில் உடைந்து காணப்பட்டது. இடது புற கண்ணம், இடது காது, இடது புற பின்புற காது 12 x 2 x 3.5செ.மி. அளவில் காயம் காணப்பட்டது. இடது புற பின்புற மண்டையின் occipital region–ல் 8 x 3 x 2செ.மி. அளவில் காயம் காணப்பட்டது. இடது புறம் Parietal region 11 x 2 x 4செ.மி. அளவில் உடைந்து காணப்பட்டது. நடுபுற பின் மண்டையில் 12 x 2 x 1செ.மி. அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது. இடது புற காதுக்கு பின் இருக்கும் மாஸ்ராய்டு 6 x 2 x 2செ.மி. மற்றும் அதிலுள்ள தசை மற்றும் ரத்த நாளங்கள் காயப்பட்ட நிலையில் இருந்தது. மூலையின் ஆழமான உள் பகுதி மண்டை ஓட்டின் அடிபகுதியில் 23 x 3.5 x 9செ.மி. அளவில் உடைந்து காணப்பட்டது. இடது மணிகட்டில் 9 x 3 x 2செ.மி அளவில் முற்றிலுமான எலும்பு முறிவு காணப்பட்டது. 3 x 1 x 1 செ.மி அளவில் கிழந்த காயம் இடது மணிகட்டில் காணப்பட்டது. 6 x 3 x 2செ.மி அளவில் இடது கை 2, 3ம் விரல் நடுவில் காயம் காணப்பட்டது. இடது கை ஆள்காட்டி விரலில் நுணி பகுதி தோல் பகுதி வெட்டப்பட்டு தோல் தொங்கி கொண்டிருந்தது. 2 x 1 x 2செ.மி அளவில் இடது 6வது விலா எலும்பில் குத்து காயம் காணப்பட்டது. வலது மணிகட்டில் 6 x 2 x 3.5செ.மி அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது. 9 x 4 x 2செ.மி அளவில் வலது கை கிழிந்த காயம் 3, 4, 5ம் விரலில் எலும்பு முறிவு காணப்பட்டது. 3 x 1 x 0.5செ.மி அளவில் வலது கையின் வெளிபுறத்தில் வெட்டு காயம் காணப்பட்டது.

**உட்புற காயங்கள்**

வயிறு காலியாக இருந்தது மற்ற உள் உறுப்புகள் வெளிர்தண்மை

மற்றும் மிருதுவதாக காணப்பட்டது. மண்டை ஓட்டில் பல எலும்பு முறிவுகள் மற்றும் மூளை ஜவ்வு கிழந்து காணப்பட்டது. அதில் ரத்த கட்டிகள் மற்றும் ரத்த கசிவும் இருந்தது. மூளையில் Temporal, parietal, occipital, pons, medulla and Spinal cord காயத்துடன் காணப்பட்டது மூளையில் அதிகமான ரத்த கசிவு காணப்பட்டது. இதயம் சீறாக இருந்தது அதில் ரத்த கசிவு இல்லை. இடது நுரையீரலில் மத்திய பகுதியில் ஆழ்ந்த குத்து காயம் காணப்பட்டது. இறப்பு சுமார் 10 முதல் 24 மணி நேரத்திற்கு முன்பு நடந்திருக்கலாம் என பிரேத பரிசோதனையில் தெரியவருகிறது. பிறகு உள் உருப்புகளை தட அறிவியல் துறைக்கு அனுப்பிவைத்தேன். அந்த அறிக்கையில் உள்உருப்புகளில் எந்த வித மான விஷச தண்மையோ மற்றும் இறந்த நபர் மது அருந்திய நிலையில் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இறப்பிற்கான காரணம் பல தரப்பட்ட பலத்த காயத்தினாலும் அதிக ரத்த போக்கிலும் இறந்து இருக்கலாம் என சான்று வழங்கினேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.7** ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.